## செங்கோட்டை நகராட்சியின் சாதரணக் கூட்டம் 08.11.2021 அன்று நடைபெற்றது

<u>மன்றப் பொருள் ;</u>

நடைபெறவிருக்கும் நகர்ப்புற உள்ளாட்சி சாதரண தேர்தல் 2021 ஐ முன்னிட்டு செங்கோட்டை நகராட்சி பகுதிக்குட்பட்ட வாக்குச் சாவடி மையத்திற்கான வரைவுப் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், தென்காசி அவர்களால் அங்கீகரித்து ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி வரைவு வாக்குச் சாவடி பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

ந.க.எண் ;585/2021/எச்1

அலுவலகக் குறிப்பு ;

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம்**

**அனுமதி வழங்கப்பட்டது**

**செங்கோட்டை நகராட்சியின் சாதரணக் கூட்டம் 16.11.2021 அன்று நடைபெற்றது**

**மன்றப் பொருள் ;**

செங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலுமுள்ள தெரு விளக்குகளை வருடாந்திர பராமப்பு மேற்கொள்வதற்கான செலவினம் ரூ.13,65,000/-ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண் ;1001/2020/இ1

அலுவலகக் குறிப்பு ;

2. ரூ.13,65,000/- வருவாய் மற்றும் மூலதன நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்**

**அனுமதி வழங்கப்பட்டது.**

**மன்றப் பொருள் ;**

செங்கோட்டை நகராட்சியின் வளர்ச்சி திட்டப் பணிகள் தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு விளம்பரக் கட்டணம் ரூ.11844/- வழங்க கோரி தினத்தந்தி பட்டியல் எண் 2122TVL371002673 நாள் 23–10–2021 வரப்பெற்றுள்ளது. சூமற்படி பட்டியல் தொகை வழங்கவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக் குறிப்பு ;

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்**

**அனுமதி வழங்கப்பட்டது.**

**மன்றப் பொருள் ;**

செங்கோட்டை நகராட்சி அலுவலக கட்டிடத்திலுள்ள தரைதளம் மற்றும் முதல் தளத்தில் உள்ள அறைகளின் தளத்தில் பதிக்கப்பட்டுள்ள செராமிக்ஸ் டைல்ஸ்கள் வெப்ப விரிவாக்கம் காரணமாக பெயர்ந்து மேல் நோக்கிய நிலையில் உள்ளது. இதனால் பணியாளர்களுக்கு அலுவலகப் பணிகள் மேற்கொள்ள இடையூறாக உள்ளது. எனவே மேற்படி தளத்தினை சரி செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.20,000/- வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு

ந.க.எண் ;1666/2021/இ1

அலுவலகக் குறிப்பு ;

1. மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம்

அனுமதி வழங்கப்பட்டது.

<u>மன்றப் பொருள் ;</u>

நகராட்சிகளில் அடிப்படை வசதி பணிகளான இயக்குதல் பராமரித்தல் திறம்பட செய்தல் பணிகளை மேற்கொள்ள போதுமான பணியாளர்கள் இல்லாததால் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்தக்காரர்கள் தேர்வு செய்து அதன்மூலம் தேவையான பணியாளர்களை நியமனம் செய்திட நகராட்சி நிர்வாக இயக்குநர்அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் 21787/ 2021/ EA2 நாள் 02-10-2021 ன் படி வழங்கப்பட்டுள்ள பொது வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடித்து தயாரிக்கப்பட்ட விபர அறிக்கையின் படி செங்கோட்டை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளைமேற்கொள்ள கீழ்கண்ட விபரப்படி தற்போது பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

1. தூய்மைப் பணியாளர் – 81 நபர்கள்
2. மேற்பார்வையாளர் – 9 நபர்கள்
3. ஓட்டுநர் – 6 நபர்கள்

மேற்கண்ட பணியாளர்களை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் அனுமதிக்கப்பட்டுள்ள பொது வழிகாட்டு நெறிமுறைகளின் படி வெளிக்கொணர்வு மூலம் (Out Sourcing) மூன்றாண்டுகளுக்கு பணியமர்த்தி திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை திறம்பட மேற்கொள்ள முதல் வருடத்திற்கு ரூ.199.01 இலட்சம் வீதம் மூன்று ஆண்டுகளுக்கு ரூ.627.27 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட திட்ட பிரேரணைக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண் ; 1551/2021/எச்1

அலுவலகக் குறிப்பு ;

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும் பணித்திறன் மதிப்பீடு செய்து ஒப்பந்த தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்து ஒப்பந்தம் புதுப்பிக்கவும், மூன்று ஆண்டுகளுக்கு தனியார் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

தீர்மானம்

அனுமதி வழங்கப்பட்டது.

<u>மன்றப் பொருள் ;</u>

நகராட்சிகளில் அடிப்படை வசதி பணிகளான இயக்குதல் பராமரித்தல் திறம்பட செய்தல் பணிகளை மேற்கொள்ள போதுமான பணியாளர்கள் இல்லாததால் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்து அதன் மூலம் தேவையான பணியாளர்களை நியமனம் செய்திட நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 21787/2021/EA2 நாள் 2.10.2021 ன்படி வழங்கப்பட்டுள்ள பொது வழிகாட்டுநெறிமுறைகளை கடைபிடித்து தயாரிக்கப்பட்ட விபர அறிக்கையின்படி செங்கோட்டை நகராட்சியில் குடிநீர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கீழ்கண்ட விபரப்படி தற்போது பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

1. மின் பணியாளர் நிலை–II – 3 நபர்கள்
2. பராமரிப்பு உதவியாளர் – 10 நபர்கள்

மேற்கண்ட பணியாளர்களை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் அனுமதிக்கப்பட்டுள்ள பொது வழிக்காட்டு நெறிமுறைகளின்படி வெளிக்கொணர்வு முகமை மூலம் (Out Sourcing) மூன்றாண்டுகளுக்கு பணியமர்த்தி குடிநீர் பணிகளை திறம்பட மேற்கொள்ள ஓராண்டிற்கு ரூ.33.90 இலட்சம் வீதம் மூன்றாண்டுகளுக்கு ரூ.101.70 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட திட்ட பிரேரணைக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும் பணித்திறன் மதிப்பீடு செய்து ஒப்பந்த தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்து ஒப்பந்தம் புதுப்பிக்கவும், மூன்று ஆண்டுகளுக்கு தனியார் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம்

அனுமதி வழங்கப்பட்டது.

**செங்கோட்டை நகராட்சியின் சாதரணக் கூட்டம் 17.11.2021 அன்று நடைபெற்றது**

**<u>மன்றப்பொருள் :</u>**

செங்கோட்டை நகராட்சியின் 24 வார்டுகளிலும் உள்ள குடிநீர் விநியோக பிரதான குழாய்கள், பகிர்மான குழாய்களின் ஏற்படும் உடைப்புகள், கழிவுகள் சரி செய்யவும், சுலீஸ் வால்வுகள், வால்வு தொட்டிகள் மற்றும் பொதுக் குழாய்களில் ஏற்படும் பழுதுகள், மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை சுத்தம் செய்தல் ஆகிய பணிகளை 2020–2021ம் ஆண்டில் வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்வதற்கு 11.11.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி முடிவுகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | திரு.D.ஆபேல் ஜெயசீலன் | 4.00 | மதிப்பீட்டை விட 1.77% அதிகம் |
| 2. | திரு. S.பரமசிவன் | | 0.04% மதிப்பீட்டை விட குறைவு |

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் திரு. S.பரமசிவன் என்பவரால் 0.04% மதிப்பீட்டை விட குறைந்த விகிதத்தில் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1417/2021/இ1)

தீர்மானம்

அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்

செங்கோட்டை நகராட்சிப் பகுதியில் உள்ள சிறுமின் விசை மின் மோட்டார்கள் (சின்டெக்ஸ்) மற்றும் திறந்தவெளி கிணற்றிலுள்ள மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யும் பணி 2020–2021ம் ஆண்டில் மேற்கொள்ள 11.11.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி முடிவுகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | திரு.D.ஆபேல் ஜெயசீலன் | 5.00 | மதிப்பீட்டை விட 1.59% அதிகம் |
| 2. | திரு. S.பரமசிவன் | | மதிப்பீட்டு விகிதம் |

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் திரு. S.பரமசிவன் என்பவரால் மதிப்பீட் விகிதத்தில் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1419/2021/இ1)

தீர்மானம்

அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்

செங்கோட்டை நகராட்சி பகுதியில் அனைத்து வார்டுகளிலும் உள்ள ஆழ்குழாய் கிணறுகளின் கைபம்புகளில் ஏற்படும் பழுதுகளை 2020–2021ம் ஆண்டில் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள 11.11.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | திரு.S.பரமசிவன் | 1.60 | 2.47% அதிகம் |
| 2. | திரு.M.பரமசிவம் | | மதிப்பீட்டு விதிதம் |

அ.கு

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் திரு.M.பரமசிவம் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள மதிப்பீட் விதித ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1417/2021/இ1)

தீர்மானம்

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப்பொருள்**

நகராட்சிகளில் அடிப்படை வசதி பணிகளான இயக்குதல் பராமரித்தல் திறம்பட செய்தல் பணிகளை மேற்கொள்ள போதுமான பணியாளர்கள் இல்லாததால் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்து அதன் மூலம் தேவையான பணியாளர்களை நியமனம் செய்திட நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 21787/2021/EA2 நாள் 2.10.2021 ன்படி வழங்கப்பட்டுள்ள பொது வழிகாட்டுநெறிமுறைகளை கடைபிடித்து தயாரிக்கப்பட்ட விபர அறிக்கையின்படி செங்கோட்டை நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கீழ்கண்ட விபரப்படி தற்போது பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

1. மின் பணியாளர் நிலை–II – 2 நபர்கள்
2. மின் கம்பி உதவியாளர் 2 நபர்கள்

மேற்கண்ட பணியாளர்களை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் அனுமதிக்கப்பட்டுள்ள பொது வழிக்காட்டு நெறிமுறைகளின்படி வெளிக்கொணர்வு முகமை மூலம் (Out Sourcing) மூன்றாண்டுகளுக்கு பணியமர்த்தி குடிநீர் பணிகளை திறம்பட மேற்கொள்ள ஓராண்டிற்கு ரூ.10.78 இலட்சம் வீதம்

மூன்றாண்டுகளுக்கு ரூ.32.34 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட திட்ட பிரேரணைக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும் பணித்திறன் மதிப்பீடு செய்து ஒப்பந்த தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்து ஒப்பந்தம் புதுப்பிக்கவும், மூன்று ஆண்டுகளுக்கு தனியார் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம்

அனுமதி வழங்கப்பட்டது.

**செங்கோட்டை நகராட்சியின் சாதரணக் கூட்டம் 26.11.2021 அன்று நடைபெற்றது**

மன்றப்பொருள்

செங்கோட்டை நகரட்சியின் சந்தை மேம்பாட்டு பணி மற்றும் நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி ஆகியவைகள் மேற்கொள்ளப்பட உள்ள இடங்களில் மண் பரிசோதனை செய்து அறிக்கை பெறுவதற்கு (Consultancy Charges) ரூ.63720/- மற்றும் அதற்கான போக்குவரவு தொழிலாளர் செலவினமும் அரசு பொறியியல் கல்லூரி திருநெல்வேலிக்கு செலுத்தப்பட வேண்டியுள்ளது மேற்படி செலவினங்களை வருவாய் நிதியிலிருந்த செலுத்தவும் திட்ட நிதி பெறப்பட்டதும் வருவாய் நிதிக்கு ஈடு செய்யவும் மன்றம் அனுமதிக்கு.

(ந.க.எண்.1294/2021/இ1)

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம்

அனுமதி வழுங்கப்பட்டது.

மன்றப்பொருள்

15வது நிதிக்குழு 2020-2021 (இரண்டாவது தவணை Tied Grant) ன் கீழ் திட்டப் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு விளம்பரக் கட்டணம் விளம்பரக் கட்டணம் ரூ.10000/- வழங்க கோரி தினக்குரல் பட்டியல் வரப்பெற்றுள்ளது (பட்டியல் எண்.1168 நாள்.28.07.2021) மேற்படி பட்டியல் தொகை வழங்கிடவும் வழங்கவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு. .

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பட்டியல் வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம்

அனுமதி வழுங்கப்பட்டது.

மன்றப்பொருள்

செங்கோட்டை நகராட்சி பகுதியில் சிறப்புச் சாலைத்திட்டம் 2015-ன் கீழ் 16 15 நாள் 176 நகர்மன்ற தீர்மான எண் ,சாலைப்பணிகள் மேற்கொள்ள வேண்டி.09. மற்றும் 2015 நகராட்சிநிர்வாக ஆணையர் .க.சென்னை அவர்களின் செயல்முறைகள் ந ,8121/2015 இ நாள் 3 27.8.2015-ன்படி வழஙகப்பட்ட நிர்வாக அனுமதியின்படி சிறப்பு சாலை திட்டம் 2015-2016-ல் சாலைபணிகள் மேற்கொள்ள கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு டுரிப் மான்யமாக ரூ.125.00 லட்சமும் நகராட்சி பங்களிப்பு ரூ.130.00 லட்சமும் அடிப்படையில் பணியினை மேற்கொள்ளவும் , .தெரிவிக்கப்பட்டு உரிய ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு பணியாணைகள் வழங்கப்பட்டது மொத்தம்

பணிகள் 10 பணிகள் எடுக்கப்பட்டு அதில் 14 செய்து முடிக்கப்பட்டு மேற்படி திட்டத்தில் விடுவிக்கப்பட்ட மானியம் முழுமையாக செலவிடப்பட்டுள்ளது. கீழ்கண்ட 4 சாலை பணிகள் நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் ஆரம்பிக்க இயலாத நிலையிலுள்ளது. மேலும் இந்நகராட்சியின் கடன் பொறுப்புகள் அதிக அளவில் உள்ளதாலும் நிதி நிலையில் பின்தங்கிய நிலையிலுள்ள காரணத்தினால் பொதுநிதியில் பணிகள் ஆரம்பிக்க இயலவில்லைஎனவே . சாலைப்ணிகளை ரத்து செய்யவும் 4 கீழ்கண்டஅரசின் வேறு ஏதேனும் ஒரு திட்டத்தில் முழு மானியமாக பெற்று பணி மேற்கொள்ளவும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்திருநெல்வேலி , ன் மொழிவுசென்னை அவர்களுக்கு மு ,அவர்கள் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர்சமர்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு

| . வ.எண் | சிப்பம் எண் | சாலையின் பெயர் | மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | I | பெரியசாமி கோவில் தெரு, சுப்பையா தெரு, ஆனந்த தியேட்டர் ரோடு மற்றும காமராஜ் காலனி | **130.00** |
| | | **மொத்தம்** | **130.00** |

அலுவலக குறிப்பு

1. இந்நகராட்சியில் போதிய நிதியாதாரம் இல்லாத காரணத்தினால் மேற்கண்ட சாலை பணிகளை ரத்து செய்ய மன்றம் அனுமதிக்கலாம் .
2. மேற்படி சாலை பணிகளை மேற்கொள்வதற்கு அரசின் வேறு ஏதேனும் ஒரு திட்டத்தில் முழு மானியமாக பெற நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்திருநெல்வேலி அவர்கள் மூலம் , சிநகராட்நிர்வாக இயக்குநர்சென்னை அவர்களுக்கு முன் மொழிவு சமர்பிக்க ,வும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம்

அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்..

செங்கோட்டை நகராட்சி பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் 2016–5 நாள் 320 நகர்மன்ற தீர்மான எண் ,வேண்டி ன் கீழ் சாலைப்பணிகள் மேற்கொள்ள17.2.மற்றும் 2016 .க.சென்னை அவர்களின் செயல்முறைகள் ந ,நகராட்சி நிர்வாக ஆணையர்2909/2016 இ நாள் 3 26.02.2016–ன்படி வழஙகப்பட்ட நிர்வாக அனுமதியின்படி தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் 2016–2017–ல் பணிகள் மேற்கொள்ள கருத்துரு சமர்பிக்கப்பட்டு திட்ட மான்யமாக ரூ.198.00 லட்சமும் நகராட்சி பங்களிப்பு ரூ.102.00 லட்சமும் அடிப்படையில் பணியினை மேற்கொள்ளவும் , தெரிவிக்கப்பட்டு உரிய ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு பணியாணைகள் வழங்கப்பட்டது 34 மொத்தம் . பணிகள் 25 பணிகள் எடுக்கப்பட்டு அதில் செய்து முடிக்கப்பட்டு மேற்படி திட்டத்தில் விடுவிக்கப்பட்ட மானியம் முழுமையாக செலவிடப்பட்டுள்ளது. கீழ்கண்ட 9 சாலை பணிகள் நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் ஆரம்பிக்க இயலாத நிலையிலுள்ளது. மேலும் இந்நகராட்சியின் கடன் பொறுப்புகள் அதிக அளவில் உள்ளதாலும் நிதி நிலையில் பின்தங்கிய நிலையிலுள்ள காரணத்தினால் பொதுநிதியில் பணிகள் முடிக்க இயலவில்லை எனவே கீழ்கண்ட சாலைப்ணிகளை ரத்து செய்யவும்.

அரசின் வேறு ஏதேனும் ஒரு திட்டத்தில் முழு மானியமாக பெற்று பணி மேற்கொள்ளவும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்சென்னை ,ல்வேலி அவர்கள் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர்திருநெ , அவர்களுக்கு முன் மொழிவு சமர்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு

| வ. எண் | சிப்பம் எண் | சாலையின் பெயர் | மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | I | சாஸ்திரி தெரு, பேருந்து நிலையம் பின்புறம் உள்ள சாலை, ஆறுமுகசாமி ஒடுக்கம்–1, மந்திரம் தெரு வார்டு 9, ஆறுமுகசாமி ஒடுக்கம்–2, பேருந்து நிலைய மேற்கு பக்க சாலை | 40.92 |
| 2. | II | சுப்பையா தெரு, பண்டாரம் தெரு, பூம்புகார் சாலை | 61.08 |
| | | **மொத்தம்** | 102.00 |

அலுவலக குறிப்பு

1. இந்நகராட்சியில் போதிய நிதியாதாரம் இல்லாத காரணத்தினால் மேற்கண்ட சாலை பணிகளை ரத்து செய்ய மன்றம் அனுமதிக்கலாம் .

2. மேற்படி சாலை பணிகளை மேற்கொள்வதற்கு அரசின் வேறு ஏதேனும் ஒரு திட்டத்தில் முழு மானியமாக பெற நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்திருநெல்வேலி அவர்கள் மூலம் , சமர்பிக்க சென்னை அவர்களுக்கு முன் மொழிவு ,நகராட்சி நிர்வாக இயக்குநர்வும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம்

அனுமதி வழங்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.19089/2021/இ2, நாள்.19.11.2021ல் செங்கோட்டை நகராட்சியின் சமுதாய கழிப்பறைகள் 2 எண்ணங்கள் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் பொது கழிப்பறைகள் 4 எண்ணங்கள் ரூ.1.30 இலட்சம் மதிப்பீட்டிலும் Operational & Maintenance Gap filling Interest Fund 2021–22 ன் கீழ் மறு சீரமைப்பு பணி மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது அதன்படி இந்நகராட்சியின் கீழ்கண்ட கழிப்பறைகள் மேற்கண்ட திட்டத்தின் கீழ் மறு சீரமைக்கும் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண். | மறு சீரமைப்பு மேற்கொள்ளும் கழிப்பறைகள் விபரம் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | வார்டு எண்.2 முத்துசுவாமி பூங்காவில் அமைந்துள்ள சமுதாய கழிப்பறை மற்றும் வார்டு 7 கே.சி.ரோட்டில் அமைந்துள்ள சமுதாய கழிப்பறை | 8.00 |
| 2. | வார்டு 2 பேருந்து நிலைய பொது கழிப்பறை (கட்டண கழிப்பறை) பேருந்து நிலைய இலவச பொது கழிப்பறை, வார்டு 2 முத்துசுவாமி பூங்காவில் அமைந்துள்ள பொது கழிப்பறை, வார்டு 15 தாலுகா அலுவலகம் வெளிப்புறம் அமைந்துள்ள பொதுக் கழிப்பறை | 1.30 |
| | **மொத்தம்** | **9.30** |

அலுவலக குறிப்பு

Operational & Maintenance Gap filling Interest Fund 2021-22 ன் கீழ் மேற்கண்ட கழிப்பறைகளை மறு சீரமைப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்**

அனுமதி வழங்கப்பட்டது.

<u>மன்றப்பொருள்</u>

செங்கோட்டை நகராட்சி வார்டு எண் 2, பேருந்து நிலையத்திற்கு வடபுறம் உள்ள இலவச பொது கழிப்பிடம், வார்டு எண் 2, முத்துச்சாமி பூங்கா வளாக முகப்பு அருகில் உள்ள பொது கழிப்பிடம் மற்றும் வார்டு எண் 14, தாலுகா அலுவலகம் முன்புறம் உள்ள பொது மக்கள் பயன்பாட்டில் இருந்து வரும் இலவச கழிப்பிடத்தினை சுகாதாரமாக பேணிக் காத்திடவும், பொது இடங்களில் மலம் மற்றும் ஜலம் கழிப்பதனை தவிர்த்திட நடவடிக்கை எடுக்கும் விதமாக ( OD Free என அறிவிப்பதற்காகவும்) அப்பகுதியினை சுகாதாரமான பகுதியாக மாற்ற வேண்டி இருப்பதாலும், வர்த்தக சங்கம், 83/29, ஜவஹர்லால் நேரு ரோடு, செங்கோட்டை என்பவருடைய 26-11-2021ம் தேதிய கடிதத்தில் அன்னாரின் சொந்த செலவில் பொது மக்களுக்கு சேவை செய்யும் நோக்கத்தில் நகராட்சியில் இருந்து எவ்வித பராமரிப்பு தொகைகளையும் எதிர்பார்க்காமல் தினந்தோறும் பராமரிப்பு செய்திட அனுமதி வேண்டி கடிதம் அனுப்பியுள்ளதன் அடிப்படையிலும், பொது மக்களின் சுகாதாரம் பேணிக் காத்திடும் நோக்கத்தில், கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு வர்த்தக சங்கம், செங்கோட்டை என்பவருக்கு மேற்கண்ட மூன்று பொது இலவச கழிப்பிடத்தினை 01-12-2021 முதல் 30-11-2022 வரை ஒரு வருடத்திற்கு பராமரித்திடவும், அனுமதி கடிதம் வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

நிபந்தனைகள் ;

1. இந்நகராட்சியால் வழங்கும் பொதுக் கழிப்பிடத்தினை வேறு சட்டத்திற்கு புரம்பாக எவ்வித செயல்களிலும் பயன்படுத்தக் கூடாது.
2. நகராட்சிக்கு அவப்பெயர் ஏதும் ஏற்படும் வகையில் பொதுக் கழிப்பிட கட்டிட வளாகத்தில் ஈடுபட்டால், உடன் இவ்வுத்தரவினை ரத்து செய்வதுடன், தங்களின் மீது சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
3. உத்தரவினை எந்நேரத்திலும் ரத்து செய்திட ஆணையாளருக்கு முழு அதிகாரம் உண்டு.
4. இவ்வுத்தரவினை கொண்டு வேறு எவ்வித சலுகைகளையும் இந்நகராட்சியில் கோர கூடாது.

(ந.க.எண் : 440/2018/எச்1)

அலுவலகக் குறிப்பு ;

1. பொது இடத்தில் மலம் மற்றும் ஜலம் கழிப்பதனை தவிர்த்திடும் நடவடிக்கைக்காகவும், பொது கழிப்பிடத்தினை சுகாதாரமாக பேணிக் காக்க வேண்டியும் வர்த்தக சங்கம், செங்கோட்டை என்ற சங்கத்தின் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மேற்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்**

**அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>மன்றப்பொருள்</u>**

செங்கோட்டை நகராட்சி வார்டு எண் 7, கே.சி ரோட்டில் உள்ள இலவச சமுதாய கழிப்பிடம் மற்றும் வார்டு எண் 2, முத்துச்சாமி பூங்கா வளாக பின்புறம் உள்ள சமுதாய கழிப்பிடம் ஆகிய இரண்டு சமுதாயப் பயன்பாட்டில் இருந்து வரும் இலவச கழிப்பிடத்தினை சுகாதாரமாக பேணிக் காத்திடவும், பொது இடங்களில் மலம் மற்றும் ஜலம் கழிப்பதனை தவிர்த்திட நடவடிக்கை எடுக்கும் விதமாக (OD Free என அறிவிப்பதற்காகவும்) அப்பகுதியினை சுகாதாரமான பகுதியாக மாற்ற வேண்டி இருப்பதாலும், மகளிர் சுய உதவிக் குழுவின் மூலமாக பராமரிப்பு மேற்கொள்ள இசைவு தெரிவிக்கப்பட்டுள்ள கடிதத்தின் படியும் சுகாதார அலுவலர் அவர்களின் **26–11–2021**ம் தேதிய குறிப்பின் படியும் அன்னாரின் சொந்த செலவில் பொது மக்களுக்கு சேவை செய்யும் நோக்கத்தில் நகராட்சியில் இருந்து எவ்வித பராமரிப்பு தொகைகளையும் எதிர்பார்க்காமல் தினந்தோறும் பராமரிப்பு செய்திட இசைவு வழங்கப்பட்டுள்ளதால், பொது மக்களின் சுகாதாரம் பேணிக் காத்திடும் நோக்கத்தில், கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு மகளிர் சுய உதவிக் குழு, செங்கோட்டை என்பவருக்கு மேற்கண்ட இரண்டு சமுதாய இலவச கழிப்பிடத்தினை **01–12–2021** முதல் **30–11–2022** வரை ஒரு வருடத்திற்கு பராமரித்திடவும், அனுமதி கடிதம் வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

நிபந்தனைகள் ;

1. இந்நகராட்சியால் வழங்கும் சமுதாயக் கழிப்பிடத்தினை வேறு சட்டத்திற்கு புரம்பாக எவ்வித செயல்களிலும் பயன்படுத்தக் கூடாது.
2. நகராட்சிக்கு அவப்பெயர் ஏதும் ஏற்படும் வகையில் சமுதாயக் கழிப்பிட கட்டிட வளாகத்தில் ஈடுபட்டால், உடன் இவ்வுத்தரவினை ரத்து செய்வதுடன், தங்களின் மீது சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
3. உத்தரவினை எந்நேரத்திலும் ரத்து செய்திட ஆணையாளருக்கு முழு அதிகாரம் உண்டு.
4. இவ்வுத்தரவினை கொண்டு வேறு எவ்வித சலுகைகளையும் இந்நகராட்சியில் கோர கூடாது.

(ந.க.எண் : 440/2018/எச்1)

அலுவலகக் குறிப்பு ;

1. பொது இடத்தில் மலம் மற்றும் ஜலம் கழிப்பதனை தவிர்த்திடும் நடவடிக்கைக்காகவும், சமுதாய கழிப்பிடத்தினை சுகாதாரமாக பேணிக் காக்க வேண்டியும் வார்டு எண் 7, கே.சி ரோட்டில் உள்ள இலவச சமுதாய கழிப்பிடத்தினை மகளிர் சுய உதவிக்குழுவிற்கும், வார்டு எண் 2, முத்துச்சாமி பூங்கா வளாக பின்புறம் உள்ள சமுதாய கழிப்பிடத்தினை மகளிர் சுய உதவிக்குழு, செங்கோட்டை என்ற சுய உதவிக் குழுவின் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மேற்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்**

**அனுமதி வழங்கப்பட்டது.**